பாடம் - 3
தவ்ஹீத் அஸ்மா வஸ்ஸிஃபாத்

الدرس الثالث
توحيد الأسماء والصفات

இது அல்லாஹ் தனக்கு என்னென்ன பெயர்கள், பண்புகள் இருப்பதாகக் கூறியுள்ளானோ அல்லது அவனுடைய தூதர் அவனுக்கு என்னென்ன பெயர்கள், பண்புகள் இருப்பதாகக் கூறியுள்ளார்களோ அவற்றை நம்புவதாகும் மேலும் அவற்றை மாற்றாமல், மறுக்காமல், எந்த விதத்தில் என விவரிக்காமல், உவமைப்படுத்தாமல் அவற்றிற்குரிய எதார்த்த நிலையில் அவனது மகத்துவத்திற்கு ஏற்ற விதத்தில் அப்படியே அல்லாஹ்வுக்குக் கொடுப்பதாகும்.

அதுபோல அல்லாஹ் தனக்கு என்னென்ன பெயர்கள், பண்புகள் இல்லையெனக் கூறியுள்ளானோ அல்லது அல்லாஹ்வுடைய தூதர் அல்லாஹ்வுக்கு என்னென்ன பெயர்கள், பண்புகள் இல்லையெனக் கூறியுள்ளார்களோ அவற்றை அவனுக்குக் கொடுக்காமல் இருப்பதாகும்.

**அல்லாஹ்வின் அழகிய பெயர்களிலிருந்து இதற்கு உதாரணமாவது:**

அல்லாஹ் தனக்கு ஹய்யுல் கய்யூம்- நித்திய ஜீவன், பேரண்டம் முழுவதையும் நன்கு நிர்வகிப்பவன் எனப் பெயர் சூட்டியுள்ளான். எனவே நாம் ஹய்யு என்பது அல்லாஹ்வின் பெயர்களில் ஒன்று என்று நம்புவது கடமையாகும். அத்துடன் இப்பெயரில் அடங்கியுள்ள தன்மையை நம்புவதும் அவசியமாகும். அதுதான் பரிபூரணமான ஜீவிதம். அதற்கு, ‘முன்பு இல்லை’ என்ற நிலையும் கிடையாது. ‘பின்பு அழிவு’ என்ற நிலையும் இருக்காது.

இன்னும் அல்லாஹ் தனக்கு ஸமீஃ - கேட்பவன் எனப்பெயர் சூட்டியள்ளான். நாம் ஸமீஃ என்பது அல்லாஹ்வின் திருப்பெயர்களில் ஒன்றென நம்புவதும், கேட்பது அவனுடைய பண்புகளில் ஒரு பண்பு எனவும், அவன் கேட்கிறான் எனவும் நம்புவது அவசியமாகும்.